ATS Nallur

பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 4.00

சுடர்: 6 பிரமோதூத ஸூ கார்த்திகை மீ 24 உ திங்கட்கிழமை (10 12 1990) UTHAYAN — A LIVELY NATIONAL TAMIL DAILY கதிர்: 14

# சிங்கள அதிகாரிகள் மூலம் நிர்வாகத்தை நடத்தத் திட்டம்!

## வடக்கு - கிழக்கின் அதிகாரத்தை தமிழர்களிடமிருந்து பறிக்க ஏற்பாடு

கொழும்பு, டிசம்பர் 10

வடக்கு, கிழக்கு மாகாணத்தில் நிர்வாக அதிகாரத்தை தமிழர்களிடமிருந்து பறிக்க அரசாங்கம் புதிய திட்டம் ஒன்றைத் தீட்டியிருப்பதாக அறியவருகின்றது.

சிங்கள அதிகாரிகளைக் கொண்டு வடக்கு, கிழக்கை நிர்வகிக்கும் விதத்தில் இடைக்கால ஏற்பாடு ஒன்றை அரசு செய்து வருகிறது.

வடக்கு, கிழக்கு மாகாண நிர்வாகத்தை முன்னர் மாகாண அமைச்சின் செயலாளர்கள் 13பேர் கவனித்து வந்தனர். அவர்களில் ஒருவர் முஸ்லிம். ஏனைய பன்னிரண்டு பேரும் தமிழர்கள்.

ஆனால் தற்போது இந்தச் செயலாளர்கள் அனைவரினதும் பொறுப்புகளையும் ஆறு அரச அதிகாரிகளைக் கொண்ட அமைப்பு ஒன்றிடம் ஒப்படைக்க அரசு முடிவு செய்துள்ளது

இந்த இடைக்கால அமைப்பில் இடம்பெறும் ஆறு அதிகாரிகளில் நால்வர் சிங்களவர் என்றும், முஸ்லிம் அதிகாரி ஒருவரும், தமிழ் அதிகாரி ஒருவரும் அதில் சேர்த்துக்கொள்ளப்படுவர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

வடக்கு, கிழக்கின் நிர்வாக அதிகாரத்தை முற்றிலும் தமிழரிடமிருந்து பறிக்கவே இந்த ஏற்பாடு. [உ-3-5]

## பதுங்குகுழி அமையுங்கள்! வேலைக்கு வாருங்கள்!!

### அரச ஊழியருக்கு புலிகள் அழைப்பு

யாழ்ப்பாணம், டிச, 10

அரச ஊழியர்களே! உங்கள் அலுவலகங்களில், வேலைத் தளங்களில் பதுங்கு குழிகளை அமைத்துக்கொள்ளுங்கள்!

எமது மக்களுக்கு அத்தியாவசிய சேவைகளை வழங்க — இன்னல் நிறைந்த இந்தக் காலகட்டத்தில் அவர்களுக்கு உதவி — டவேலைக்கு வாருங்கள்!!

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி மாவட்டச் செயலகம் நேற்று சகல அரச, கூட்டுத்தாபன ஊழியர்களுக்கும் இவ்வாறு அழைப்பு விடுத்துள்ளது.

இது சம்பந்தமாக நேற்று

[4 ஆம் பக்கம் பார்க்க]

## வவுனியாவில் குண்டு வீச்சு!

வவுனியா, டிச. 10

வவுனியா பூந்தோட்டம் பகுதியில் நேற்று முன்தினம் காலை 10 மணியளவில் நடந்த பொம்மர் தாக்குதலில் ஒருவர் பலியானார்; இருவர் காயமடைந்தனர்.

பூந்தோட்டத்துக்கும் நொச்சிமோட்டைக்கும் இடையில் உள்ள பகுதியில் இடம்பெற்றதாகக் கூறப்படும் இந்தத் தாக்குதலில் காயமடைந்த ஒருவர் அபாய நிலையில் இருந்ததாகவும் — அவருக்கு என்ன நடந்தது என்பது தெரியவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது. (உ-3-5)

## வடக்கு, கிழக்கு மாகாண கல்வி நிர்வாகத்தில் மாற்றம்

கொழும்பு, டிச. 10

வடக்கு, கிழக்கு மாகாணத்தின் கல்வி நிர்வாக அமைப்பில் பெரும் மாற்றம் கொண்டுவரப்படவிருக்கிறது.

புதிய நிர்வாக சீரமைப்பின்படி வடக்கு கிழக்கில் வன்னிப் பிராந்தியம் உட்பட ஐந்து கல்விப் பிராந்தியங்கள் அமைக்கப்படும். அவற்றுக்குப் பொறுப்பாக ஒவ்வொரு பணிப்பாளர்கள் நியமிக்கப்படுவார்கள்.

தற்போது தனித்தனிக் கல்வி மாவட்டங்களாக இயங்கிவரும் மன்னார், வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய பகுதிகள் நான்கும் வன்னிக் கல்விப் பிராந்தியத்தின் கீழ் கொண்டு வரப்படும்.

உத்தேச சீரமைப்பின் பிரகாரம் வடக்கு, கிழக்கில் ஐந்து கல்விப் பிராந்தியங்கள்

[4 ஆம் பக்கம் பார்க்க]

## யாழ். ஆஸ்பத்திரிக்கு மருந்து அனுப்பக் கட்டுப்பாடு

### கூட்டுப்படைத் தலைமையகம் விதிப்பு

கொழும்பு, டிச. 10

யாழ். ஆஸ்பத்திரிக்கு மருந்துவகை அனுப்புவதற்கு கூட்டுப்படைகளின் தலைமை அலுவலகம் கட்டுப்பாடு விதித்துள்ளது.

இதனாலேயே போதியளவு மருந்து வகைகளை யாழ். ஆஸ்பத்திரிக்கு அனுப்ப முடியாதுள்ளதாக சுகாதார அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

பண்டேஜ், கொட்டன் துணிகள், வலித்தடை மருந்து போன்றவற்றுக்குக் கூடுதல் கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. [ஒ-3-5]

## வ. பி. போ. ச. ஊழியருக்கு சம்பளம் கிடைக்கும்!

கொழும்பு, டிச. 10

வட பிராந்திய போக்குவரத்துச் சபை ஊழியருக்கான அக்டோபர், நவம்பர் மாதங்களுக்கான சம்பளம் 12 லட்சம் ரூபா வழங்கப்பட்டுள்ளது.

இதற்கான காசோலை கொழும்பில் வைத்து வ. பி. போ. சபையின் பொது முகாமையாளரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அவர் யாழ்ப்பாணம் திரும்பியவுடன் ஊழியர்களுக்கு சம்பளம் வழங்கப்படும்

மத்திய போக்குவரத்துச் சபையின் பிரதம கணக்காளர் இவ்வாறு தெரிவித்தார்.

வ. பி போ. சபை ஊழியர்

[4 ஆம் பக்கம் பார்க்க]

## ஜனாதிபதி பிரேமா திறந்து வைத்த தமிழரின் ஆஸ்பத்திரி மீது தாக்கு!

கொழும்பு, டிச 10

கொழும்பு கொட்டாஞ்சேனை அல்-ஹுசைனியா வீதியில் ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாசாவால் அண்மையில் திறந்து வைக்கப்பட்ட — தமிழருக்குச் சொந்தமான — தனியார் வைத்தியசாலை காடையர் கும்பல் ஒன்றினால் தாக்கிச் சேதமாக்கப்பட்டது.

அந்த ஆஸ்பத்திரியின் உரிமையாளரான டாக்டர் சிறிதரனும் கத்திக் குத்திக்கு இலக்கானார்.

வைத்தியசாலையில் இருந்த மருந்து வகைகள், தளபாடங்கள் மற்றும் வைத்தியசாலை வாகனங்கள் என்பனவும் அடித்து நொருக்கி நாசமாக்கப்பட்டன.

இந்த வைத்தியசாலை புதிதாகத் திறக்கப்பட்டதால் அங்கு யாகம் நடத்தப்பட்டு வந்தது. யாகத்தில் வைக்கப்பட்டிருந்த கும்பங்கள், யாக குண்டங்கள் என்பன அந்தக் காடையர்களால் தூக்கி வீசப்பட்டன.

இந்தச் சம்பவம் கடந்த 25ஆம் திகதி நடந்துள்ளது [ஒ-3-5]

## வவுனியாவில் அவஸ்தைப்பட்டு தப்பிப் பிழைத்து வந்த 300 பேர்!

யாழ்ப்பாணம், டிச. 10

கொழும்பிலிருந்து வடக்கு நோக்கிப் புறப்பட்டு, ஊரடங்கு காரணமாக வவுனியாவில் இரண்டு வாரங்களுக்கு மேல் தங்கி நின்று அவலப்பட்டு, நரக வேதனைகள், உயிராபத்துக்களை அனுபவித்து தப்பினோம் பிழைத்தோம் என்று சுமார் 300 பேர் யாழ்ப்பாணம், கிளிநொச்சிப் பகுதிகளுக்கு வந்து சேர்ந்தனர்.

இவர்களில் ஒரு பகுதியினர் நேற்றும் மற்றொரு பகுதியினர் நேற்று முன்தினமும் வந்தனர்.

இவர்கள் பட்ட அவஸ்

[4 ஆம் பக்கம் பார்க்க]

## படைகளுக்கு உதவுவதில் 'புளொட்' மும்முரம்!

ஸ்ரீலங்கா இராணுவத்துடன் சேர்ந்து இயங்குவதற்காக புளொட் இயக்கத்தைச் சேர்ந்த புலர் வன்னிப் பகுதிக்குச் சென்றிருப்பதாக கொழும்பு ஆங்கில தினசரி ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அண்மையில் கொழும்பில் அரசுப் பிரதிநிதிகளுக்கும் புளொட் இயக்கத் தலைவர்களுக்கும் இடையில் நடந்த பேச்சுக்களை அடுத்தே இந்த ஏற்பாடு என்று தெரிவிக்கப்பட்டது.

மாங்குளம் முகாம் வீழ்ச்சியை அடுத்துத், இன்றிப் போன அரசு, புளொட்டின் உதவியை நாடியதாகவும் அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டது.

தென் இந்தியாவில் மண்டபம், கொட்டப்பத்து ஆகிய அகதி முகாம்களில் உள்ள புளொட் இயக்கத்தவரையும் — மாலைதீவில் சதி முயற்சிக் குற்றச்சாட்டு தொடர்பாக ஆயுள் தண்டனை அனுபவித்து வரும் 68 புளொட் இயக்கத்தவரையும் இலங்கைக்கு அழைத்து, அவர்களையும் அரசு படைக்கு உதவ அனுப்ப புளொட் இயக்கம் நடவடிக்கை எடுத்து வருவதாகவும் அச்செய்தியில் கூறப்பட்டுள்ளது. (உ-எ)

## தென் தமிழீழமக்களுக்கு உதவ மகளிர் முன்னணி வேண்டுதல்

யாழ்ப்பாணம், டிச.10

மரணிப்பதிலாவது நிம்மதி கிடைக்கும் என்று வாழ்க்கையில் நம்பிக்கை இழந்து கொண்டிருக்கிறார்கள் எங்கள் தென் தமிழீழச் சகோதரர்கள்.

''சகோதரர்களே! உதவிட நாம் இங்கே இருக்கிறோம்'' என்று நம்பிக்கை ஊட்ட நீங்கள் அனைவரும் முன்வருவீர்கள் என்ற திடமான நம்பிக்கையுடன் உங்கள் முன் வருகிறோம்.

இவ்வாறு விடுதலைப் புலிகள் மகளிர் முன்னணியினர் விடுத்த அறிக்கையில் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

இனி இழப்பதற்கு எதுவுமே இல்லை என்ற நிலையில், உயிருடன் இயங்கிக் கொண்டிருக்கும் தென்தமிழீழச் சகோதரர்கள் [illegible]

[4 ஆம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

நத்தார் புதுவருட வாழ்த்து மடல்களை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். (வியாபாரிகளிற்கு விசேட கழிவுண்டு) ''மண்டேலா ரேடர்'' இல 256 A, பருத்தித்துறை வீதி நல்லூர். 'அரஸ் ஜவுளியகம்' 146 நவீன சந்தை யாழ்ப்பாணம். (15000)

### போட்டோஸ்ரட்

மீண்டும் யாழ்நகரில் தரமான போட்டோஸ்ரற் றோணியோ வேலைகளுக்கு தொடர்பு கொள்ளுங்கள் காலை 9.00 மணி - 2.00மணி வரை ஸ்கைலைன்ஸ் 281 H, மணிக்கூண்டு வீதி, யாழ்ப்பாணம். [ஏஜென்சி தபால் கந்தோர் அருகாமை] [சி-5487]

### காணவில்லை

சின்னக்கா உன்னை காணாமல் அம்மா படுத்த படுக்கையாய் இருக்கிறா உடனே வரவும் அல்லது தகவல் தரவும். உன்னை எதிர் பார்த்துக் கொண்டிருக்கும், தம்பி [நாகலிங்கம்] கந்தர்மடம். (1581)

### வேப்பம் உரம்

நெல், வெங்காயம், மிளகாய், புகையிலை மற்றும் சகல பயிர்களுக்கும் பாவிக்கக்கூடிய வேப்பம் உரம் விற்பனைக்கு உண்டு. சுப்பிரமணியம் அங்கோ ஆடியபாதம் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம் (கல்வியங்காட்டுச்சந்தையில் இருந்து 100 யார்) [15051]

### நியூ விக்ரேஸ்

நியூ விக்ரேஸ் ஸ்தாபனம் மீண்டும் வழமை போல நடைபெறுகிறது. ரேடியோ, மணிக்கூடு, மின்சார உபகரணங்கள் உடனுக்குடன் திருத்தியும், எமேஜென்சி லைட், சார்ஜ் செய்தும் கொடுக்கப்படும். ரேடியோ உதிரிப்பாகங்கள் பெற்றுக் கொள்ளலாம். முன்பு எம்மிடம் திருத்துவதற்கென கொடுக்கப்பட்ட பொருட்களை இவ்வருட இறுதிக்குள் பெற்றுக் கொள்ளவும். நியூ விக்ரேஸ் B. M. C ஒழுங்கை, யாழ்ப்பாணம். (சி/5505)

### (I. A. B. Classes)

Institute of Bockkeepers (London) June 1991 (Exam) foundation Inter and fin-alsக்கான வார இறுதி நாள் வகுப்புக்கள் ஆரம்பம் 15-12-1990 வார நாள் வகுப்புக்கள் ஆரம்பம்: 12-12-1990 விபரங்கட்கு North Ceylon Technical Institute, 14 st. Peters lane Hospital Road, Jaffna. (C/5543)

### Radio T. V Deck

புதிய பிரிவு வகுப்புக்கள் ஆரம்பம்: 12- 12-1990 துரித பயிற்சி நெறி இலகு விளக்கங்கள் செய்முறைப் பயிற்சியுடன் கூடியது. விபரங்கட்கு: North Ceylon Technical Institute, 14, St. Peters Lane, Hospital Road Jaffna (சி/5542)

### தவறிவிட்டது

இல 203, 3 ஆம் குறுக்குத் தெரு யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஜீடித் சுதேஷனா அந்தோனிப்பிள்ளையின் அடையாள அட்டை 697710477 V ரூபா 1700/- பணத்துடனும், கைப்பையுடன் கொய்யாத்தோட்டத்துக்கும் - அடைக்கலமாதா கோயிலுக்குமிடையில் 8- 12- 90 அன்று தவறி விட்டது. நான் இராணுவமுள்ள இடத்தில் கடமையாற்றுவதால் கண்டெடுத்தவர்கள் தயவு செய்து மேலுள்ள விலாசத்தில் அல்லது உதயன் பணிமனையில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (15075)

### சேவை

தமிழ், ஆங்கில தட்டெழுத்து, றோணியோ வேலைகளுக்கு தொடர்பு கொள்ளுங்கள் அருண் மாக்கட்டிங் அன் சேவிஸஸ், 15, 2 ஆம் ஒழுங்கை, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம். (சி-5516)

### விற்பனைக்கு

இறைச்சிக் கோழி, சுத்தமான விளையுயநல்லெண்ணை வெள்ளடியன் சேவல், குஞ்சு ஒரு சோடி பெண்டம் ஆகியன விற்பனைக்கு உண்டு. தொடர்பு:- வி.எம். பாக்கியநாதன், சாந்தன் வீதி, (கட்டி லேன்) கோண்டாவில் மேற்கு (15074)

# LONDON EXAMS

## May / June 91

C I. M A — Stage 1
A. A T — Stage 1
I. A. B — Foundation, Inter, Final

ஆரம்பம்: 15 - 12 - 1990

கொம்பியூட்டர் புதிய வகுப்புகள் 12 - 12 - 90 ல் ஆரம்பமாகின்றன.

**School of Business Administration**
16, 3ஆம் குறுக்கு வீதி,
யாழ்ப்பாணம். [சி-5518]

# ஓராண்டு நினைவஞ்சலி



சிறப்பு 13 01-1907 இறப்பு: 10 12-1989

## திரு. மார்க்கண்டு கனகரெத்தினம்

(முன்னாள் ஓய்வு பெற்ற சுகாதார திணைக்கள பரிசோதகர் உத்தியோகஸ்தர்)
(Ret. P. H. I)

அன்புத் தந்தையே! உங்கள் திருவுருவம் மறைந்தாலும், உங்கள் நினைவுகள் எம் மனதில் என்றும் நிலைத்திருக்கும்.

நீங்கள் இறைவன் திருவடியில் சாந்தியடைய பிரார்த்திக்கிறோம்.

மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், சகோதர,
சகோதரிகள், உறவினர்.

வட்டு. கிழக்கு,
வட்டுக்கோட்டை. (14794)

# ஓராண்டு நினைவஞ்சலி



ஜனனம்: 05 - 08 - 1969
மரண : 21 - 11 - 1989
திதி: 10-12-1990

## வெற்றிவேலு பத்மாஜினி (குட்டி மான்)

அன்பு மகளே! சோதரியே!
அழகுச் செல்வி குட்டிமானே!
உன்னைப்பிரிந்து ஓராண்டு
அதற்குள் ஓடி மறைந்தாலும்
உன் உறவை மறப்போமோ!
இன்னும் பல ஆண்டானாலும்
உன்னை மறந்தே விடுவோமோ!
என்றும் எங்கள் இதயத்தில்
வைத்தே உன்னைப் போற்றிடுவோம்.

அம்மா, அப்பா, சகோதர சகோதரிகள்,
பெரியம்மா குடும்பத்தினர்.

கன்னகை அம்மன் கோவிலடி,
சண்டிலிப்பாய். (15061)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்: 1959 — 07 — 30
மறைவு: 1990 — 11 — 10

## க. வரதராசன்

வாழ்ந்ததுவோ சிலகாலம் பழகியதோ பலரோடு
பொதுத் தொண்டுதனில் பார் போற்றும்
உத்தமனாய்
சீரும் சிறப்புடனும் அமைந்த உன்
இல் - வாழ்க்கையிலே
உன்னிரு கண்களென வந்துதித்த
பச்சிளம் பாலகர் தனையும் மறந்து
இளையவனானாலும் மூத்தவனெனப் பெரும் பேறு
பெற்றதனாலோ
எமையெல்லாம் தவிக்கவிட்டு முன்னோடியாக
முன்னோடிச் சென்றாயோ!

அன்னாரின் இறுதிச்சடங்குகளில் கலந்து கொண்டோர்க்கும் அனுதாபச்செய்திகளை தெரிவித்தோருக்கும் எம் நன்றிகள்.

உமது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்
சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

மனைவி, பிள்ளைகள், குடும்பத்தினர்.
சுதுமலை தெற்கு, மானிப்பாய். [15070]

# 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்: 1 - 10 - 1916
மறைவு: 14 - 12 - 1987
திதி: 10 - 12 - 1990



## திரு. சுப்பிரமணியம் துரைசாமி

எங்கள் அன்புத் தெய்வமே ஆண்டு மூன்றாகியும் நீங்கள் எம்மோடு வாழ்ந்த நாட்கள் எம நெஞ்சை விட்டு அகலாதய்யா. உங்கள் ஆத்மா சாந்தியடைய என்றும் ஆண்டவனை வேண்டுகிறோம்.

உங்கள் பிரிவால் துயருறும்;
மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
சன்னதிவீதி, உடுப்பிட்டி. [15057]

# ஓராண்டு நினைவஞ்சலி

உதிப்பு: 13 | 03 | 1959



உதிர்வு: 21 | 12 | 1989

## திருமதி கிருஷ்ணன் சரஸ்வதிஅம்மா

திதி.- 10 — 12 — 1990

நீயிருந்த வீடும் நினைவிருக்கும் நெஞ்சகமும்
வாயிருந்த இன்சொல் வார்த்தைகளும்
வாடாத புன்சிரிப்பும் மனம் தளரா சேவைகளும்
இல்லையென்று நம்ப இதயம் மறுக்குதம்மா
நின் ஆன்மா நித்திய சாந்தி பெற
நித்தமும் சந்நிதியானை வேண்டுகின்றோம்:

கணவன், ஐயா, அம்மா, தம்பி,
உற்றார், உறவினர்கள்.

24, இந்திரபுரம்,
முகமாலை. [15022]

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# உதயன்

## வேண்டாத போக்கு

இந்தியாவின் முன்னாள் பிரதமர் திரு. வி பி. சிங், சென்னைக்கு வந்த சமயம் ஈழத்தமிழர் விவகாரம் குறித்துப் பிரஸ்தாபித்திருக்கிறார். ஈழத்தமிழர்களின் பாதுகாப்பு மற்றும் அதிகாரப் பரவலாக்கல் குறித்து உறுதியான நடவடிக்கைகளை எடுக்குமாறு இலங்கை அரசாங்கத்தை இந்திய மத்திய அரசு வற்புறுத்த வேண்டும் என்று அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

பிரதமராக இருந்த சமயம் ஈழத்தமிழர் பிரச்சினையில் அநேகமாக மௌனம் சாதித்தவர், ஏனோதானோ போக்கைக் கடைப்பிடித்தவர், ஓரளவுக்கு மதில்மேல் பூனையாகக் காலத்தைக் கடத்தியவர் திரு. வி. பி. சிங் தமிழர் நலன் நாடி எதையும் உஷாருடன், உருப்படியாகச் செய்வதற்கு அவர் முன்வந்ததில்லை. தமிழக முதல்வர் கருணாநிதி கொடுத்த உந்துதலைக்கூட, வேகம் குறைத்துச் சக்தியற்ற தாக்கியவர்.

இப்போது எதிரணிக்கு வந்ததும், ஈழத்தமிழர் நலனில் அக்கறை கொண்டவர் போலப் பேசுகிறார். இவ்வகையில் வி. பி. சிங் மட்டுமன்றி, அனேகமாகச் சகல இந்திய அரசியல்வாதிகளும் அந்த ரகத்தினர்தான். எதிரணியில் இருக்கும்போது ஈழத்தமிழர் விவகாரத்தில் அக்கறை உள்ளவர்களாகப் பேசிவிட்டு, அரசாங்கப் பக்கம் சென்றதும் அதனை உதாசீனம் செய்து, மறந்து, மற்றப்பக்கம் திரும்புபவர்கள்.

ராஜீவ்காந்தி, கருப்பையா மூப்பனார், வாழப்பாடி ராமமூர்த்தி, ஜெயலலிதா என்று பெயர்களை அடுக்கிக் கொண்டே போகலாம். தங்கள் சுய அரசியல் லாபத்துக்கும், முன்னேற்றத்துக்கும் வாக்கு வங்கியைப் பலப்படுத்தவே அவர்கள் தமிழர் விவகாரத்தைப் பயன்படுத்துகிறார்கள்!

மிகச் சமீபத்தில், தனக்கென ஒரு பொம்மை அரசை- சந்திரசேகர் அரசை - உருவாக்கும் வரை, தான் நேரில கூறாவிட்டாலும், ஜெயலலிதா மூலம் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாகக் குரல் கொடுத்தார் ராஜீவ் காந்தி. ஆனால் இப்போது கருணாநிதி அரசை எப்படியாவது மடக்கி, ஆளுநர் ஆட்சியைக் கொண்டு வந்து, தமது கட்சிக்கும் தனது தோழமை ஜெயலலிதாவுக்கும் தேர்தலுக்கு வாக்கும், செல்வாக்கும் சேர்க்க முயல்கிறார்.

இவ்வாறாக, ஈழத்தமிழர் பிரச்சினையை வைத்து தமக்கு அரசியல் லாபம் தேடவும், தமது நிலைப்பாட்டை ஈழத்தமிழர் மீது திணிக்கவுமே இந்திய அரசியல்வாதிகள் எல்லோரும் பழகிக் கொண்டு விட்டார்கள்.

கொழும்பு அரசாங்கம் எதுவும் தமக்கு விசுவாசமாகவோ அல்லது உள்ளார்ந்த உண்மையான நட்புடனோ நடக்கமாட்டா என்பதை நன்றாகத் தெரிந்தும், தமிழர் பக்கம் நின்று அவர்களின் உரிமைப் போராட்டத்தை அங்கீகரிக்கப் பின்னிற்கிறார்கள்.

தமது நாட்டுக்கும் இலங்கைக்கும் இடையிலான பூகோளப் பின்னணியைக் கூட மறந்து, செயற்படுகிறார்கள். சீனாவையும், பாகிஸ்தானையுமே நல்ல நண்பர்களாகக் கருதும் கொழும்பு அரசுகளுடன் தாமாக வலிந்து ஒட்டி உறவாட விரும்புகிறார்கள்.

தமிழர்களின் உரிமைப் போராட்டத்தைஅங்கீகரித்து ஒடுக்கப்பட்டவர்கள் என்ற வகையிலும், மனிதாபிமான ரீதியிலும் அவர்களுக்கு ஆதரவளித்து அவர்களின் நண்பனாக இருக்க நினைக்கிறார்கள் இல்லை. இதனால் ஈழத்தமிழருக்கல்ல, இந்தியாவுக்கே நட்டம் அதிகம்.

# பருத்தித்துறையில் பொருள்களை இறக்குவதில் கஷ்டம்

## இறங்குதுறை பெருமளவுசேதம்

யாழ்ப்பாணம், டிச. 10

தற்போது கொழும்பில் இருந்து கப்பல் மூலம் வட பகுதிக்கு அனுப்பப்படும் பொருள்களை இங்கு இறக்குவதில் புதிய சிக்கல்கள் உருவாகி வருகின்றன.

பொருள்களை இறக்கும் வேலைகள் தொடர்ந்து சாத்தியப்படுமா என்பது தற்போது கேள்விக்குரியதாக இருப்பதாகச் சொல்லப்படுகிறது.

இப்போது பொருள்கள் இறக்கப்படும் பருத்தித்துறை துறைமுக இறங்குதுறை பெரும் அளவில் அதாவது 90 சத வீதம் சேதமுற்றிருப்பதும்—

தற்போதைய சீரற்ற கால நிலையால் கடற்கொந்தளிப்பு இருப்பதுமே இதற்குக் காரணங்கள் ஆகும்

பொருள்களை இறக்குவதற்குப் பொறுப்பாக உள்ள பருத்தித்துறை ப. நோ. கூ. சங்கம், பொருள்களை கப்பலில் இருந்து இறக்கிக் கரைக்குக் கொண்டு வருவதில் உள்ள பிரச்சினைகள் குறித்து யாழ். அரசாங்க அதிபருக்குத் தெரிவித்துள்ளது.

தற்போதைய நிலையில் கப்பலில் தொடர்ந்து பொருள்களை இறக்க முடியாத நிலைமை இருப்பதாக அரச அதிபருக்கு பருத்தித்துறை ப. நோ. கூ. ச. இயக்குநர்சபை தெரிவித்துள்ளது.

இதன் கூட்டம் கடந்த 5 ஆம் திகதி நடைபெற்றபோது பொருள்களை இறக்குவதில் உள்ள கஷ்டங்களை முழுமையாக ஆராய்ந்த பின்னரே அரசாங்க அதிபரின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டது. (இ)

## தனியார் பஸ் திணைக்களம் கலைக்கப்படும்

கொழும்பு, டிச.10

தனியார் பஸ் திணைக்களம் கலைக்கப்பட இருக்கிறது.

மாகாண சபைகளின் கீழ் தனியார் பஸ்சேவை நிர்வாகம் கொண்டு வரப்படவிருப்பதைத் தொடர்ந்தே இந்த நடவடிக்கை எடுக்கப்படவிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (இ-எ)

## 'விங்கோரேடர்ஸ்' மீண்டும் பருத்தித்துறை வந்தது

பருத்தித்துறை டிச. 10

''விங்கோரேடேர்ஸ்'' என்ற கப்பல் கடந்த 7 ஆம் திகதி பருத்தித்துறை துறைமுகத்தை மீண்டும் வந்தடைந்துள்ளது.

இந்தக் கப்பலில் இருந்து ஏற்கெனவே ஆயிரம் மெற்றிக்தொன் உலர் உணவுப் பொருள்கள் இறக்கப்பட்டிருந்தன.

கப்பலில் குடிதண்ணீர் பற்றாக்குறை நிலவியதால் குடிதண்ணீர் நிரப்புவதற்காக கப்பல் திரும்பிச் சென்றிருந்தது.

தற்போது மீண்டும் கடந்த 7 ஆம் திகதி வந்துள்ள இக்கப்பலில் இன்னும் 800 மெற்றிக்தொன் உலர் உணவுப் பொருள்கள் இருப்பதாகவும் பொருள்கள் இறக்கும் வேலைகள் இன்று திங்கட்கிழமை ஆரம்பிக்கப்படும் என்றும் செஞ்சிலுவைச்சங்கப் பிரதிநிதிகள் தெரிவித்தனர். (இ-118)

## முகாமைத் துப்புரவு செய்யும் பணியில் போராளிகள்

கிளிநொச்சி, டிச. 10

மாங்குளம் இராணுவமுகாமில் இராணுவத்தினரால் புதைக்கப்பட்டுள்ள மிதிவெடிகள், கண்ணிவெடிகள் ஆகியவற்றை அகற்றி முகாம் பகுதியை துப்புரவாக்கும் பணியில் விடுதலைப்புலிகள் தற்போது ஈடுபட்டுள்ளனர்.

முகாமில் உள்ள கட்டடச் சிதைவுகளை துப்புரவாக்கும் போது இராணுவத்தினரின் ஆயுதங்கள் கண்டெடுக்கப்பட்டு வருகின்றன என்று தெரிவிக்கப்படுகிறது. (இ-76)

## பிள்ளையார் கோவிலும் குண்டுவீச்சில் சேதம்

கிளிநொச்சி, டிச.10

கிளிநொச்சி, புளியம்பொக்கணைப் பகுதியில் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற குண்டு வீச்சில் பிள்ளையார்கோயில், கூட்டுறவுச் சங்கம், அரிசி ஆலை, கடைகள் என்பனவும் சேதம் அடைந்தன. சந்தியில் கால்நடைகளும் இறந்து கிடக்கக் காணப்பட்டன.

பொம்மர் வட்டமிட ஆரம்பிக்கவே மக்கள் பாதுகாப்பான இடங்களில் தஞ்சம் புகுந்ததால் உயிரிழப்புக்கள் ஏற்படவில்லை.

ஏற்கனவே இந்த சந்திப் பகுதியை நோக்கி கடந்த மாதங்களில் 2 தடவைகள் விமானத்தாக்குதல்கள் நடத்தப்பட்டிருந்தன. (இ-76)

## விவசாயத்துறையில் ஏற்பட்ட பாதிப்புக் குறித்து மதிப்பீடு

யாழ்ப்பாணம், டிச.10

யாழ். மாவட்டத்தில் கடந்த ஜூன் மாதம் இராணுவ நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்ட பின்னர்-விவசாய நடவடிக்கைகளில் ஏற்பட்ட பாதிப்புக்கள் சம்பந்தமான மதிப்பீடு ஒன்று மேற்கொள்ளப்பட்டுவருகிறது.

யாழ். மாவட்ட விவசாய உதவிப் பணிப்பாளர் திரு. கே, குணரத்தினம் இதனைத் தெரிவித்தார்.

குறிப்பாக, உரத் தட்டுப்பாடு, சீரான நீர் விநியோகம் இன்மை, விவசாயிகள் இடம் பெயர்வு முதலான காரணங்களால 'விவசாய உற்பத்தி' எந்த அளவுக்கு பாதிக்கப்பட்டுள்ளது என்பதை அறிவதே இந்த மதிப்பீட்டின் நோக்கம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

யாழ் மாவட்டத்திலுள்ள 12 விவசாயப் பிரிவுகளிலும் இந்த மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இந்த மதிப்பீடுகள் கிடைத்ததும் இது பற்றிய விரிவான அறிக்கை ஒன்று விவசாயத் திணைக்களத்துக்கு அனுப்பப்பட இருக்கிறது. (இ-6)

## 1,258 பேர் இதுவரை பதிவு

யாழ்ப்பாணம், டிச.10

குவைத்திலிருந்து நாடு திரும்பியவர்களில் ஆயிரத்து 258 பேர் தமது பெயர்களைப் பதிவு செய்துள்ளனர் என்று யாழ்ப்பாண வை. எம். சி. ஏ தெரிவித்தது.

இதுவரை பதிவு செய்து கொள்ளாதவர்கள் எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர் பதிவு செய்து கொள்ளுமாறு கோரப்பட்டுள்ளனர். (இ-5)

## நினைவுத் தூபி

மாவீரர் தினத்தையொட்டி கொழும்புத்துறை துண்டி எழிலூர் சனசமூக நிலையத்தில போராளி கப்டன் சரத்பாபுவின் நினைவுத்தூபி அவரின் பெற்றோரால் திறந்து வைக்கப்பட்டது.

மாவீரர் நினைவாக மரம் நடுகை வைபவமும் இடம் பெற்றது. (இ-30)

## விவசாயப் பாடசாலையில்: கோழிவளர்ப்புத் திட்டத்தை ஆரம்பிக்க முடியாத நிலை

திருநெல்வேலி விவசாயப் பாடசாலையில் மீள ஆரம்பிக்கத் திட்டமிடப்பட்டிருந்த ''கோழி வளர்ப்பு அபிவிருத்தித் திட்டம்'' இராணுவ நடவடிக்கைகளால் தடைப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்தை மீள ஆரம்பிப்பதற்கான நிதி ஒதுக்கீடுகள் கூட செய்யப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது, (இ-6)

## இலங்கை அகதிகளுக்கு அடையாளக்கார்ட்

சென்னை, டிச.10

தமிழகத்தில் தஞ்சமடைந்துள்ள இலங்கைத் தமிழ் அகதிகளுக்கு அடையாளக் கார்ட்டுகள் வழங்கும் விஷயம் பற்றி மாநில அரசுடன் ஆலோசனை நடத்தப்பட இருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

மாநில அகதிகள் மறுவாழ்வுத்துறை சிறப்பு அதிகாரி திரு. எம். எஸ். இராமதாஸ் முன்கண்ட தகவலை வெளியிட்டார்.

இந்திய கடலோரக் காவற் படையினரின் தீவிர பாதுகாப்பு நடவடிக்கை காரணமாக, இலங்கைத் தமிழ் அகதிகள் தமிழ்நாடு வருவது குறைந்துள்ளதாகவும் திரு. இராமதாஸ் தெரிவித்தார். (இ-எ)

## வீதிகள் திருத்தப்பட்டன

கெற்பேலியில் வீரமரணமடைந்த போராளிகளின் நினைவாக கெற்பேலி சிற்றூரவையின் முயற்சியால் மாவீரர் வாரம் தொடர்பாக வீதிகள் பலவும் சிரமதானம் மூலம் செப்பனிடப்பட்டன.

வீதிகளின் பெயர்கள் மாற்றப்பட்டுப் போராளிகளின் பெயர்கள் சூட்டப்பட்டன.

மடத்தடி வீதி லெப். அங்கிள் வீதி என்றும், பாடசாலை வீதி நிமால் வீதி என்றும், கெற்பேலி விடத்தற்பளை வீதி அன்ரனி வீதி என்றும் பெயர் சூட்டப்பட்டன. (இ-30)

## குடும்பநல சேவையாளராக தெரிவானோர் விவரம்

யாழ்ப்பாணம், டிச. 10

வடக்கு - கிழக்கு மாகாண சபையின் கீழ், சுகாதார அமைச்சின் செயலாளரால் குடும்ப நல சேவையாளர்களாக பின்வருவோரும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கு 9 - 8 - 90 முதல் நியமனம் வழங்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பெயர் விவரம் வருமாறு

எம். கமலாம்பிகை, கே. மகேஸ்வரி. எஸ். காவேரி, பி. செல்வறஜனி, கே. கணேஸ்வரி, டி. திருகணேஸ் செல்வி, எஸ். திருமஞ்சணம், எஸ். மனோன்மணி, ஆர். விஜயகுமாரி, எஸ். மாரியம்மா, பு. சிவபத்தி, எல். உலகேஸ்வரி, பீ. கிருஸ்ணபதி, எஸ். விமலாதேவி, வி. சந்திரகாந்தா.

கே. பரமேஸ்வரி, என் திவநாயகி. பீ. கலாவர்ணி, வி. செல்வராணி, எம். இராஜலக்சுமி.

இவர்கள் உடனடியாக யாழ். பிராந்திய சுகாதாரத் திணைக்களத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (இ - 6)

## யுத்தத்தினால் நாட்டில் வேலையில்லாத்திண்டாட்டம்

வடக்கு - கிழக்கு யுத்தம் காரணமாக நாட்டில் வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரிக்கும் ஆபத்து ஏற்பட்டிருக்கிறது.

கொள்கைத் திட்டமிடல் அமைச்சு தனது அறிக்கை ஒன்றில் இத்தகவலை வெளியிட்டுள்ளது.

இதன் காரணமாக நாட்டில் வேலையில்லாதோர் எண்ணிக்கை இப்போதிருக்கும் 13 லட்சத்தில் இருந்து 16 லட்சமாக அதிகரிக்கும் என்றும் அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (இ-எ)

# திட்டி, வசந்தபுரம் பகுதிகளில் வெள்ளத்தால் மக்கள் பாதிப்பு

## இடர் பெயரும் நிலையில் நூற்றுக் கணக்கான குடும்பங்கள்

யாழ்ப்பாணம், டிச. 10

யாழ். நகர புறப் பகுதியில் அமைந்துள்ள திட்டி, வசந்தபுரம் ஆகிய குடியேற்றங்கள் மழையினால் பாதிப்புற்றுள்ளன.

இதனால் இந்த இரு குடியேற்றங்களிலும் வாழ்ந்து வரும் நூற்றுக்கணக்கான குடும்பங்கள் இடம்பெயர வேண்டிய சூழ் நிலை ஏற்பட்டுள்ளது.

இந்த குடியேற்றங்கள் பள்ளக்காணிகளில் அமைந்திருப்பதால் மழை வெள்ளம் காரணமாக அங்குள்ள குடிசைகள் நீரில் மூழ்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

இங்கு வாழும் குடும்பங்கள் வறுமைக் கோட்டினுள் வாழ்ந்து வருகின்றன.

போசாக்கின்மை, சுகாதார வசதியின்மைகாரணமாக குழந்தைகள், கர்ப்பிணித் தாய்மார்கள் ஆகியோர் இலகுவில் நோய்வாய்ப்படக் கூடிய சூழ்நிலை நிலவுகிறது.

இவர்களுக்கு அரச சார்பற்ற தொண்டர் நிறுவனங்கள் கூட உதவி செய்ய முன்வரவில்லை என்று கவலை தெரிவிக்கப்படுகிறது.

அதேசமயம் இந்தக் குடும்பங்கள் அண்மைக்கால இராணுவ நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்டிருந்ததும் குறிப்பிடத்தக்கது. (இ-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வவுனியா ரயில் சேவை மீண்டும் நிறுத்தம்!

மீள ஆரம்பமான கொழும்பு- வவுனியா ரயில் சேவை மீண்டும் இரண்டு தினங்களில் தடைப்பட்டது.

கடந்த 23 ஆம் திகதியுடன் நிறுத்தப்பட்ட இந்த ரயில் சேவை மீண்டும் கடந்த புதன் வியாழன் ஆகிய இரு நாட்களும் நடைபெற்றது.

வெள்ளிக்கிழமை காலை இந்த ரயில் மூலம் வவுனியா வருவதற்காக ஏராளமானோர் கோட்டை ரயில் நிலையத்தில் கூடிய போது திடீரென மதவாச்சி வரையே ரயில் சேவை நடைபெறும் என அறிவிக்கப்பட்டது.

தற்போது தினசரி மதவாச்சி வரையே ரயில்சேவை நடைபெற்று வருகிறது [உ-3]

# ஐ.தே.க. மாநாட்டில் 'புளொட்'

வெள்ளைப்புவலில் எதிர் வரும் 23 ஆம் திகதி நடை பெறும் ஐ. தே. கட்சியின் 36 ஆவது வருடாந்த மாநாட்டில் 'புளொட்' இயக்கமும் பங்குபற்றும் என்று தெரிவிக்கப்பட்டது. (உ-3-5)

# கிழக்கில் ஜீ. சி. ஈ (சா/த) பரீட்சை:

# இரண்டு நிலையங்களில் 2 மாணவரே தோற்றினர்!

மட்டக்களப்பு, டிச. 10

கிழக்கில் ஜீ.சி.ஈ பரீட்சை கடந்த திங்களன்று ஆரம்பமானபோது மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள இரு பரீட்சை நிலையங்களுக்கு பரீட்சை எழுத தலா ஒவ்வொரு மாணவர்களே வந்திருந்தனர்.

வந்தாறுமூலை ம. வி., கிரான் ம. வி., முறக்கொட்டாஞ்சேனை இராமகிருஷ்ண வித்தியாலயம் ஆகியவற்றின் மாணவர்களுக்காக சித்தாண்டியில் ஏற்படுத்தப்பட்ட நிலையத்திற்கும்-

செங்கலடிப் பிரதேசத்தில் விண்ணப்பித்திருந்தவர்களுக்காக அமைக்கப்பட்ட கோட்டைமுனை பரீட்சை நிலையத்திற்குமே ஒவ்வொரு பரீட்சார்த்திகள் வந்திருந்தனர்.

பரீட்சை எழுத வந்த இரு மாணவர்களுக்கும் அங்கு பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருந்த இராணுவத்தினரே தேநீரும், உணவும் வழங்கினார்களாம்.

பொதுவாக கிழக்கில் எல்லா பரீட்சை நிலையங்களிலும் மாணவர் வரவு இதே மாதிரியே இருந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (உ-3-5)

# தென் தமிழீழ மக்களுக்கு...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ணில் வாழ்விடமாந்து அரத்தப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்-

அகதி முகாம்கள் என்ற பெயரில் இயங்கும் தடுப்பு முகாம்களில் அடைக்கப்பட்டு அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

பாரபட்சமற்ற முறையில் சேவை புரிவதாகப் பேச்சளவில் கூறிக்கொள்ளும் சமூக சேவை நிறுவனம் எதற்கும் தென்தமிழீழ மக்கள் படும் துயரம் தெரியவில்லை-

இப்போது இயற்கை வேறு அந்த மக்களை அல்லலுக்கு உள்ளாக்கியுள்ளது. வெள்ளத்தால் பெரும் எண்ணிக்கையான மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். மருத்துவ வசதியின்மையால் இயற்கை மரணங்கள் அதிகரித்துள்ளன-

இன்னற்படும் தென் தமிழீழ மக்களுக்கு நீங்கள் கொடுக்க நினைக்கும் பொருள் ஆடையாக இருக்கலாம்; சமைப்பதற்கு உதவும் பாத்திரமாக இருக்கலாம்; பணமாக இருக்கலாம். எந்த வடிவத்திலும் அவற்றைத் தந்துதவ முன் வருவீர்கள் என்ற உறுதியுடன் நம்பி உங்களிடம் வருகிறோம்-என்றும் அந்த அறிக்கையில் கேட்கப்பட்டுள்ளது. [அ]

# வடக்கு, கிழக்கு...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

இயங்கும்.

யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருகோணமலை, வன்னி, அம்பாறை ஆகியவையே அந்த ஐந்துமாகும்.

மேற்படி பிராந்தியங்களுக்குப் பொறுப்பாக மாகாணக் கல்விப் பணிப்பாளர் ஒருவர் இருப்பார்.

அவர் மாகாணத்தின் கல்வி நிர்வாகத்திற்கும், ஆசிரிய இடமாற்றம், பதவி உயர்வு, புதிய பாடசாலைகளை நிறுவுதல் போன்ற செயற்பாடுகளுக்கு பொறுப்பாகவிருப்பார்.

ஐந்து கல்விப் பிராந்தியங்களுக்கும் தனித்தனியாக பிராந்தியக் கல்விப் பணிப்பாளர்கள் நியமிக்கப்படுவார்கள். பிராந்தியக் கல்வி நிர்வாகங்களுக்கு அவர்கள் பொறுப்பாகவிருப்பார்கள்.

மாகாணத்தின் கல்விக் கொள்கைத் திட்டமிடலுக்கும், நிதி ஒதுக்கீடுகளுக்கும் பொறுப்பாக மத்திய அரசாங்கத்தால் செயலாளர் ஒருவர் நியமிக்கப்படுவார்.

தற்போது வடக்கு, கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் நிர்வாகம் - செயலாளர், சிரேஷ்ட கல்விப் பணிப்பாளர், நான்கு பணிப்பாளர்கள் ஆகியோரால் நிர்வகிக்கப்பட்டு வருவது தெரிந்ததே. (உ-3)

# வவுனியாவில் அவஸ்தை....

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

தைகளும், இன்னல்களும், துன்பங்களும் கொடும் அனுபவங்களாகும்.

வந்தவர்களில் பெரும்பாலானவர்கள் அரசாங்க உத்தியோகத்தர்கள்; மற்றவர்கள் குடும்பஸ்தர்கள்; மத்திய வயதுக்காரர்.

ஆனாலும் வவுனியாவில் இராணுவத்தினர் விட்டு வைக்கவில்லை. இருத்தி எழுப்பினார்கள்; துப்பாக்கி முனையில் பதற்றமுறச் செய்தார்கள்; பலரைத் தாக்கினார்கள்.

கொழும்பிலிருந்து வந்த இவர்கள், அகதி முகாம்களிலும், தனியார் வீடுகளிலும் கஷ்டப்பட்டது வேறு.

வவுனியாவை விட்டு வருவதற்கு அவர்கள் அனுபவித்த அவஸ்தைகளும், பட்ட அலங்கோலங்களும் அளவற்றவை.

பயணத்தின் நடுவே சிக்குண்டு அவலப்பட்ட அவர்களுக்கு, பயணத்தைத் தொடர வவுனியா இராணுவ இணைப்பதிகாரி அனுமதிச் சீட்டு வழங்கினார். ஆனால் கீழே உள்ளவர்கள் தமது அதிகாரத்தையும், வெறித்தனத்தையும் வெளியிட்டார்கள்.

பூந்தோட்டம் பகுதியில் முகாமிட்டிருக்கும் இராணுவத்தினர் கர்ண பயங்கரப் பேர்வழிகள் என்று தெரிவித்து, நகர இராணுவத்தினர் இந்த 300 பேரையும் மூடப்பட்ட லொறிகளில் அடைத்துக் கொண்டு வந்து பூந்தோட்டத்தில் விட்டனர்.

அதற்குள்ளும் சோதனைகள், மிரட்டல்கள், ''தேகப் பயிற்சிகள்'', பயமுறுத்தல்கள், என்று எத்தனை கொடும் அனுபவங்கள்!

பூந்தோட்டத்திலிருந்து தொச்சிமோட்டை வரை நான்கு மைல்கள் சேற்றுக்குள் நடந்து வந்து ஒருவாறு கரைசேர்ந்தனர். (அ-5-3)

# ஈராறு மாதங்கள் நினைவு



தோற்றம்:
15 - 11 - 1921

மறைவு:
10 - 12 - 1989

## திருமதி ஜேட்றாட் ஜேர்ஸ்

ஈர் ஆறுமா தங்கள் நினைவு இல்லை,
எம் உயிர் உள்ளவரை மறவோம்
பண்போடும் பாசத்தோடும் வாழ்ந்து
எம் எல்லோரையும் ஆறாத்துயரில் ஆழ்த்தி
மீளாத் துயில் கொண்ட அம்மா
உம் ஆத்மா சாந்தியடைய
ஆண்டவனைப் பிரார்த்திக்கிறோம்.

பிரிவால் துயருறும்:
கணவன், பிள்ளைகள், பேரன், பேத்திமார்,
அக்கா, தங்கை, மருமக்கள்,
பெறாமக்கள், உறவினர்கள்.

225, பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம். [15028]

# பதுங்குகுழி...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

மாவட்டச் செயலகம் வெளியிட்ட ஓர் அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது:-

விடுதலைப் போராட்டம் நடந்துவரும் இந்தக் காலத்தில் எமது மக்கள் சொல்லொணாத் துயரங்களை அனுபவித்து வருகின்றனர்.

அரசு பலவித கட்டுப்பாடுகளையும் ஊரடங்கு போன்ற தடைகளையும் விதித்து வருகிறது.

இந்தவேளையிலும் எமது மக்கள் நாளாந்தம் தமது கடமைகளை செய்தே வருகின்றனர்.

ஊரடங்கு அமுலிலுள்ள வேளையிலும் சந்தைகள், விற்பனை நிலையங்கள், கடைகள் என்பன திறக்கப்படுகின்றன. மக்கள் தமது அன்றாட கடமைகளை தங்கு தடையின்றி செய்து வருகின்றனர்.

எனினும் அரச ஊழியர்கள் ''பாதுகாப்பு இல்லை'' என்ற காரணத்தைக்காட்டிக் கொண்டு வேலைக்குச் செல்வ பின்னடிக்கும் நிலை தொடர்கிறது.

இந்த ஊழியர்கள் எந்நேரமும் வீட்டிற்குள் அல்லது பதுங்குகுழிக்குள் இருப்பதில்லை.

இதை உணர்ந்து அரச ஊழியர்கள் நடந்து கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகிறோம் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ)

# வ. பி. போ. ச...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

கள் தமது சம்பளக் காசோலையை ஆஸ்பத்திரி வீதியிலுள்ள இலங்கை வங்கிக் கிளையில் மாற்றிக் கொள்ள வசதிகள் செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை-

வடக்கில் இருந்து கொழும்புக்கு வந்த வ. பி. போ. சபை ஊழியர்கள் 31 பேர் கடந்த செவ்வாய்க்கிழமை தலைமையகத்தில் சம்பளத்தைப் பெற்றுக்கொண்டனர் என்றும்-

மன்னார் டிப்போ ஊழியர்கள் வவுனியாவில் தமது சம்பளத்தைப் பெற்று வருகின்றனர் என்றும் கொழும்பில் தெரிவிக்கப்பட்டது. [ஒ-3-5]

# மரண அறிவித்தல்

## திருமதி மயில்வாகனம் நாகரெத்தினம்

திருமதி மயில்வாகனம் நாகரெத்தினம் காலமானார். இவர் காலஞ்சென்ற பொன்னையா மயில்வாகனத்தின் அன்பு மனைவியும், மகேந்திரராஜா (பொலிஸ் திணைக்களம்), தனபாலசிங்கம் (அவுஸ்திரேலியா), திலகவதி, சிவசுப்பிரமணியம், சுந்தரலிங்கம் (கிராமசேவகர். ஈச்சமோட்டை), யோகேஸ்வரன் (அவுஸ்திரேலியா), பத்மாவதி, வீரமரணமடைந்த முன்னாள் அம்பாறை, யாழ் மாவட்ட அரசியல் பொறுப்பாளர் மேஜர்டயஸ் கந்தசாமி (தவராஜா) ஆகியோரின் அன்புத்தாயாரும், ராஜேஸ்வரி, ராஜேஸ்வரராணி (அவுஸ்திரேலியா), ஜெயராசா, செல்வலிங்கம் (ஓமான்), கமலா, லலிதா, பாமினி (அவுஸ்திரேலியா), ரங்கநாதன், புனிதவதி ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 31/1, ஈச்சமோட்டை வீதியில் உள்ள அன்னாரின் இல்லத்தில் இருந்து இன்று 10-12-1990 காலை 10 மணியளவில் தகனக்கிரியைக்காக துண்டி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் தயவு செய்து ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ம. சுந்தரலிங்கம்
31/1 ஈச்சமோட்டை வீதி,
யாழ்ப்பாணம். (15077)

# மரண அறிவித்தல்கள்

## ஆறுமுகசாமி செகராசசிங்கம்

ஆறுமுகசாமி செகராசசிங்கம் [முன்னாள் General Manager, Dept. of Water Supply and Drainage, Jaffna] 2-12-1990 இல் South Africa வில் அகால மரணமானார்.

இவர் சிவகாமசுந்தரியின் அன்புக் கணவரும், ராஜ்குமார் [U.S.A], ரேணுகாதேவி [Johansburg] அவர்களின் அன்புத் தந்தையும், கனகசபாபதி பிரேமச்சந்திரன் [முன்னாள் Engineer, Lanka Cement Ltd. K K.S] இன் அன்பு மாமனாரும் ஆவார்.

தகவல்:
ச. பரமேஸ்வரன்
4, ராதா ஒழுங்கை,
வண்ணார்பண்ணை. [15081]

## திருமதி ஞானப்பிரகாசம் அன்னம்மா

திருமதி ஞானப்பிரகாசம் அன்னம்மா 9-12-1990 ஞாயிற்றுக்கிழமை காலமானார்,

இவர் காலம்சென்ற ஆசிரியர் கணபதிப்பிள்ளை ஞானப்பிரகாசம் அவர்களின் அன்பு மனைவியும், மேரி யோசலின் [ஆசிரியை, மகா வித்தியாலயம், காங்கேசன்துறை], அந்தோனிப்பிள்ளை, அல்பிறட், பிலிப், அல்போன்ஸ் [காணிப் பதிவகம், பருத்தித்துறை], அக்னஸ் தவமணி, அகஸ்ரின் [பிரதேச சபை அலுவலகம், புதுக்குடியிருப்பு] ஆகியோரின் அன்புத் தாயாரும், அ.பாக்கியநாதர் [ஆசிரியர், நடேஸ்வராக் கல்லூரி, காங்கேசன்துறை], செல்வராணி, ஞானரட்ணம், ஞானசிகாமணி [ஆசிரியை, சைவப்பிரகாச வித்தியாசாலை, தும்பளை], அருமைத்துரை, டாக்டர் தவமலர் [பிரதேச சபை, அச்சுவேலி] ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் 10-12-1990 திங்கட்கிழமை மாலை 4-00 மணிக்கு கற்கோவளம் புனித செபஸ்தியார் சேமக்காலையில் நடைபெறும்.

தகவல்:
றோ. அருமைத்துரை
கற்கோவளம். [14684]

## சின்னத்துரை வரதராஜா

(முன்னைநாள் சாமுவேல் அன் சன்ஸ் லிமிட். ஊழியர்)

சின்னத்துரை வரதராஜா காலமானார். இவர் உடுவிலைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் கஸ்தூரியார் வீதியில் வசிப்பவரும், செல்வநாயகியின் அன்புக் கணவரும், முருகானந்தன், காயத்திரியின் அன்புத் தந்தையும், சச்சிதானந்தன், சதானந்தம், திருமதி அம்பிகாதேவியின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 10-12-1990 இல் கோம்பையன் மயானத்தில் நடைபெறும். இத் தகவலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
திருமதி செல்வநாயகி
469, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். [14685]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் [பிறைவேட்] லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 10 - 12 - 1990 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org